III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

MCOP. 41/2022

Deposition of witness for the Petitioner /PW 1
Respondent solemnly by Selvi. U.Dharani, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 07-03-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : எம்.சித்ரா | Village | : |
| Husband's Name | : ஆர்.மாரி | Taluk | : |
| Age | : | Calling | : |

**<u>முதல் விசாரணை</u>**

நான் மனுவின் முதலாவது மனுதாரர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 17 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை, ம.த.சா.1 முதல் 17 வரை ஆகும். எனவே மனுவில் கேட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் எனது கணவர் இறந்து போனார். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. சம்பவ இடத்தில் இருந்த ஒருவர் எனக்கு போன் செய்து விபத்து பற்றிய தகவல் கொடுத்தார். மாலை 7.30 மணியளவில் விபத்து நடைபெற்றது. எனது கணவர் நடந்து செல்லும்போது மயக்கம் வந்ததால் உட்கார்ந்திருந்தார். அப்போது அவர் மீது கார் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார். எனது கணவருக்கு மயக்கம் வந்ததன் காரணமாக அவரின் கவனக்குறைவினால் சாலையில் சென்று கொண்டிருந்த வாகனத்தின்

மீது மோதி தானே விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. 2வது மனுதாரரான எனது மகள் திருமணம் ஆகி தனது கணவருடன் தனியாக வசித்து வருகிறார். 3வது மனுதாரர் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். நான் முன்னர் வேலை பார்த்து கொண்டிருந்தேன். இப்போது பார்க்கவில்லை. தனது கணவரின் தொழில் மற்றும் வருமானத்தை காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காரின் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை சம்பவத்தின் போது ஓட்டிச்சென்றுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ஆதலால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அந்த வாகனத்திற்கு முறையான பெர்மிட் பெறப்படவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.